1975 மார்ச் 22]

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இயந்திரப் பொறியியல் துறை நெல் உலர்த்தும் சூரிய வெப்பக் கருவி ஒன்றை வடிவமைத்துள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இக்கருவியை தஞ்சாவூர் மாவட்டத்தில் பரப்புவதற்கான திட்டங்கள் எதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த நெல் உலர்த்தும் சூரிய வெப்பக் கருவி ஒன்று அமைப்பதற்கு என்ன செலவாகிறது? பரீட்சார்த்தமான நிலையில்தான் இருக்கிறதா அல்லது செயல்படுத்தப்பட்டு வருகிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த நெல் உலர்த்தும் சூரிய வெப்பக் கருவி ஒன்று சோதனைக்காக அமைக்கப் பட்டது. அதனுடைய செலவு ஏறத்தாழ ரூபாய் 1,200 ஆயிற்று. இந்த சூரிய வெப்பக்கருவியை ஓட்டுவதற்கு ஒரு "ஹார்ஸ் பவர் மோட்டார்" வேண்டும். அதோடு மின்சாரம் வேண்டும். இவ்வளவு செய்த பிறகு ஒரு மணிக்கு அரை மூட்டை அதாவது 30 கிலோ என்ற அளவு நெல்தான் உலர்த்த முடியும். அதுவும் வெயில் அடித்தால்தான் உலர்த்த முடியும். எனவே இந்த இயந்திரமில்லாமல் இந்த அளவுக்கு உலர்த்த முடியுமென்று கருதித்தான் விவசாயிகளும் அரிசி ஆலைக்காரர்களும் இந்த இயந்திரத்தை விரும்பவில்லை. ஆகையால்தான் அதைப் பரப்புவதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. மத்திய அரசு இதை மூன்றுண்டு காலம் இன்னும் சோதித்துப் பார்க்க வேண்டுமென்று பணம் ஒதுக்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு கொடுத்திருக்கிறார்கள்.

Wheat Cultivation in Tamil Nadu.

*170 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D.V.D'MONTE) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have evolved any new scheme to introduce wheat cultivation in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

தமிழ் நாட்டில் கோதுமை பயிரிடும் திட்டம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. வி. டி. மாண்டி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் கோதுமை பயிரிடும் புதிய திட்டம் எதனையும் அரசு தயாரித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

The Hon. Thiru Si. Pa. ADITANAR: (a) and (b): During the year 1974–75, 400 quintals of seeds of a variety of wheat known as 'Chota Lerma' were obtained from the Government of India free of cost and distributed to the wheat-growers in the districts of the Nilgiris, Coimbatore and Madurai. No other scheme has been evolved.

Sugarcane Cess.

* 171 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amount collected yearwise by way of Sugarcane Cess from the North Arcot District Co-operative Sugar Mill from 1970–71 to 1972–73; and

(*b*) the details of the road-works undertaken out of the cess fund in the Mill Area and the expenditure incurred therefor?

கரும்பு மேல் வரி.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கரும்பு செஸ் மூலம் 1970—71 முதல் 1972–73-ஆம் ஆண்டு வரை வசூலான தொகை ஆண்டு வாரியாக எவ்வளவு?

(இ) இதன் மூலம், இவ்வாலையின் பகுதியில் எடுத்த சாலை வேலைகளின் விபரமும் தொகையும் யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல்.பலராமன்: தலைவரவர்களே, 1970–71 ஆம் ஆண்டில் பங்கீடு தரவில்லையென்று பதிலில் குறிப்பிட்டிருக்கிருர்கள். அதற்கான காரணம் என்ன? ஆனல், 1970–71-ல் செலவு 25 ஆயிரம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கின்ருர்கள். நடைமுறையில் இது எப்படி என்ற விவரத்தை நான் அறிய விரும்புகிறேன். ஒதுக்கீடு எதுவும் இல்லையென்று இங்கே பதிலில் காணப்படும்போது, செலவு மட்டும் 0·25 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கின்ருர்கள். 1971–72, 1972–73-ல் கரும்பு

@ 50–51ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.